## சென்னையில் 2 நாட்களில்

# மெட்ரோ ரயில்களில் 62,405 பேர் பயணம்

சென்னை

கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு, சென்னையில் மெட்ரோ ரயில்களில் 2 நாளில் 62 ஆயிரத்து 405 பேர் பயணம் செய்துள்ளனர். முகக்கவசம் அணியாதவர்களிடம் ரூ.200 அபராதம் வசூலிக்கப்படுகிறது.

கரோனா ஊரடங்கால் நிறுத்தப்பட்ட மெட்ரோ ரயில் சேவை ஒரு மாதத்துக்குப் பிறகு கடந்த 21-ம் தேதி மீண்டும் தொடங்கியது. கரோனா பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி இரு தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, காலை மற்றும் மாலை நேரங்களில் மட்டும் 5 நிமிடத்துக்கு ஒரு சேவையும், மற்ற நேரங்களில் 10 நிமிடத்துக்கு ஒரு சேவையும் அளிக்கப்படுகிறது. அதேபோல, கரோனா விதிமுறைகளைப் பின்பற்றி 50 சதவீத பயணிகள் மட்டுமே ரயிலில் பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அதிக அளவில் பயணம் செய்து வருகின்றனர். முகக்கவசம் அணியாமல் வருவோரிடம் ரூ.200 அபராதம் வசூலிக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மெட்ரோ ரயில் சேவை தொடங்கிய 2 நாட்களில் மட்டும் 62 ஆயிரத்து 405 பேர் பயணம் செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் கரோனா விதிமுறைகள் தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.